ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

ஒருபிரமாண வாக்கியத்தை நம்பினவர்களாயின் அதிற் கூறியபடி எல்லோரும் ஒரேவிதமாக விஷயங்களை அறிந்துகொள்வதும், கர்மங்களைச்செய்வதும் உசிதமாகும். அந்தப்பிரமாணத்திலேயே ஸமபலமாக ஒன்றற்கொன்று விரோதமுள்ள இரண்டுவிதம் கூறப்படுமாயின் விகல்பமாக ஏதாவதொன்றை கர்மவிஷயத்தில் அங்கீகரிப்பது நியாயமாகும். மற்றொன்றை தூஷிக்கக்கூடாது, அந்தப்பிரமாணத்திலேயே ஒன்றைஸ்துதிசெய்து மற்றொன்றை நிந்தைசெய்திருந்தாலும் ஆங்கு நிந்தையில் தாத்பர்யமில்லை. ஸ்துதி செய்யவேண்டியதை ஸ்துதிசெய்வதிலேயே அதற்கும் தாத்பர்யம் சொல்லவேண்டுமென்று மீமாம்ஸகர் (சிறந்தமுறையில்விசாரணைசெய்பவர்) களின்கருத்து. அப்படியிருக்கையில் ஒரேவிதமாயுள்ளவிடத்தில் நிந்தாசங்கைக்கே இடமில்லை. ஆனால் அந்தப்பிரமாணவாக்கியத்திற்குப் பொருள்படுத்துவதில் இப்படியா? அப்படியா? என்று ஸம்சயமோ, அல்லது ஆக்ஷேபமோ வந்தால் தாத்பர்யநிர்ணயத்திற்காகக் கூறப்பட்ட ஆறுவிதங்களான லிங்கங்களை அனுஸரித்து ஸம்சயத்தையும், ஆக்ஷேபத்தையும் நிவர்த்திசெய்து பொருளை ஒரேவிதமாகத்தான் நிச்சயிக்கவேண்டியது. "அந்தப்பிரமாணத்தில் எனக்கும் நம்பிக்கையுண்டு,, என்றுசொல்லிக்கொண்டே ஒருவரை ஒருவர் தூஷித்துக்கொள்ளக்கூடாது. எல்லோரும் இஹத்திலும், பரத்திலும், சுகமாயிருக்கவேண்டுமென்ற விருப்பங்கொண்டவர் ஸமரஸ உணர்ச்சியடைந்து ஒற்றுமைப்பட்டு ஹிதத்தையே போதிக்கவேண்டுமேயன்றி ஆத்திரப்பட்டு அவதூர்சொல்லக்கூடாது. தூஷிப்பதால் த்வேஷம் அதிகப்படுமேயன்றி ஒற்றுமைக்கு இடமில்லாமற்போய்விடும். த்வேஷப்பட்டவர் சுயநலத்தையே நாடுவார்களேயன்றி பிறர்நலத்தைக் சவனிக்கமாட்டார்கள். ஆகவே தற்காலத்தில் சிலகூட்டத்தார் பெரியாரிடமெல்லாம் பழிசுமத்திவிட்டு, பொதுநலத்திற்குத் தாமே பாடுபடுவதாகப் பத்திரிகைகளில் பிரசுரித்துக்கொண்டுத் தம்பெருமையைத்தாமே புகழ்ந்துகொள்ளுகிறார்கள். இது பெருந்தனத்திற்கு அழகன்று. பிராசீனகாலமாக புகழ்பெற்று நடந்துவந்த பாலிகாவிவாஹத்தில் ஆபாஸயுக்திகளால் குற்றங்குறை கூறி பிரௌடாவிவாஹத்தை ஸாதிக்க பெரு முயற்சிசெய்து ஆர்யச்சிறுவர்களின் மனத்தையும் மயக்கிவருகிறார்கள். வேதத்தில் எனக்கும் நம்பிக்கையுண்டென்று ஆர்யவாலிபர்களை வஞ்சிப்பதற்காக வெளிப்படையாய்ச் சொல்லிக்கொண்டுவருதாலேயே ஸகலவேதார்த்தங்களையும் தெரிந்துகொண்டுவிட்டதாகத் தைரியமாய் பேசிக்கொண்டு வைதிகர்களையும் வாய்கூசாமல் வம்புக்கிழுக்கிறார்கள். ஆயினும் ஆழ்ந்த பொறுமையுள்ள ஆஸ்திகசிரோமணிகள் சுத்த ஸாத்வீகமுறையில் அவர்களுக்கும் ஸன்மார்க்கத்தில் புத்தி பிரவேசிக்கட்டுமென நினைத்துக்கொண்டிருக்கிறார்களேயன்றி தங்களை தூஷித்துவிட்டதற்காக புதுநாகரீகம்பெற்றவர்களைத் த்வேஷிப்பதில்லை. அப்படியே எல்லோரும் ஸாத்விக வழியில் வந்துசேருவார்களாக. சுபம்,

பத்திராதிபர்,

## பெரியோருக்கு புத்திசொல்லவேண்டுமா?

புத்தியிற்சிறந்தர்வகளே பெரியோர்களெனப்படுவார்கள். அவர்களுக்கும் புதிதாக எவரும் புத்தி கற்பிக்கவேண்டியதாக நேரிடாது. அப்படி புத்தி புகட்டவேண்டியதாய் நேரிட்டால் அவர் பெரியாராகமாட்டார். அப்படியிருக்கையில் தற்காலத்தில் சிலர் அப்பெரியாருக்கும் புத்திபுகட்ட புறப்படுகிருர்கள். இவர்கள்தான் பொதுநலத்துக்கு பாடுபடுபவர்களாம். பெரியோர்களைப் பழிப்பதே பொதுநல்மென இவர்கள் கருத்துப் போலும். பெரியோர்கொண்ட கருத்துப்படி வர்ணாச்ரமப் பிரிவினையை அங்கிகரிக்கின் மனிதர்களுக்குள்ளேயே உயர்வுதாழ்வு கருதப்படுவதுபற்றி, அவாவர்க்குரிய ஸ்வயஸம உரிமை பாதிக்கப்படுகிறதல்லவா? அப்பொழுது பெரியோரெனப்படுவோர் பொதுநலத்தைக்கருதினரென எப்படிக்கூறமுடியும்? என தற்காலத்திய மேதாவிகள் எண்ணிக்கொண்டு பெரியாரிடம் பழிசுமத்தப்பார்க்கிருர்கள். அது பொருந்தாது. பொதுக் காரியத்தை பலபேர் சேர்ந்து செய்யவேண்டியதாக இருந்தால் ஆங்கு சிலர் உயர்ந்தும் சிலர் தாழ்ந்தும் இருந்தே அவாவர் தன்மைக்குரிய உயர்ந்ததும் தாழ்ந்ததுமான காரியத்தைச்செய்தே பொதுக்காரியத்தை நிறைவேற்றவேண்டும். அதில் ஒருவருடைய உரிமையும் தவறிப்போவதில்லை. எல்லோருக்குமே அங்கு ஸம உரிமை வேண்டுமானல் அந்தப்பொதுக்காரியம் ஒருக்காலும் நடைபெருது—உதாஹரணமாக ஒரு ராஜாங்கத்தில் ராஜீய கார்யம் நடைபெறவேண்டுமானல் ஒருவன் உயர்ந்த ஸ்தானத்தில் ராஜாவாகவும் ஒருவன் தாழ்ந்த ஸ்தானத்தில் வேலைக்காரனுகவும் இருந்து அவனவனுக்குரிய காரியத்தை நடத்தினல் ராஜீயகாரியம் ஒழுங்காய் நடத்தப்பட்டதாகும். எல்லோருக்குமேஸம உரிமை உண்டென்று கருதினல் எல்லோரையும் ராஜாவாக வைக்கமுடியுமா? அல்லது எல்லோரையும் வேலைக்காரனகவே செய்துவிடலாமா? எல்லோரும் வேலைக்காரராகிவிட்டால் சக்ரவர்த்தியாக

இருந்து ராஜ்யமாளுபவர் எவர்? எல்லோரும் ராஜாவாக இருந்தால் வாசற்காப்பவனாக இருந்து வேலை செய்பவன் எவன்? இந்த விவாதத்தில் ஒன்றும் நடைபெறாது. ஒருஸமயம் அரசனாக இருந்தவன் மற்றொரு ஸமயத்தில் வேலைக்காரனாவதும் ஒரு ஸமயம்வேலைக்காரனாக இருந்தவன் மற்றொரு ஸமயம் ராஜாவாக ஆவதும் பொருத்தமுடையதன்று. ஸிருஷ்டிகாலந்தொடங்கிநாளதுவரை நடந்துவந்த ராஜாங்கங்களில் அப்படி மாற்றப்பட்டதாகக் காணோம். ஆனால் வம்சபரம்பரையாக வந்தவனே பிறப்பு முதல் அந்தஸ்தானத்தில் நிலைபெறுவதாகக் காணப்பட்டு வருகிறது. ஆங்கு ஸமஉரிமை பாதிக்கப்பட்டதாகக் கருதப் படுகின்றதா? ஆயுதப்பயிற்சி செய்வதை அரசாங்கத்தார் ஆக்ஷேபித்தால் அதை மீறி நடக்கமுடியுமா? ஆகவே அவரவர்வேலையை அவரவர் செய்துவருவதே ஸம உரிமையாகும்' இங்கு மற்றோர் உதாரணமுமுண்டு— அதாவது ஒரு சரீரத்தாலாகவேண்டிய கார்யங்களில் ஓர் அவயவம் உயர்ந்தஸ்தானத்தில் தலைவனாயிருந்து வழிகாட்டவும், மற்ற அவயவங்கள் அதன்கீழிருந்து அதுகாட்டியபடியே நடந்துவந்தால் அந்தக் கார்யங்கள் ஒழுங்காய் நிறைவேறும். எல்லா அவயவங்களும் தலைமைவஹிக்க விரும்பினால் ஓரிடமிருந்து மற்றோரிடம் செல்வதெப்படி? அதனால் ஒன்று மேலிருக்கவேண்டியதுதான் மற்றவை அதன் கீழிருக்கவேண்டியதுதான் கடவுளமைத்த அமைப்பு. இதைமாற்றவிரும்புவோர் தலையைக்காலாகவும் காலைத் தலையாகவும் கருதுபவராவார். அது சரியானதல்ல. சிலகாலம் தலை மேல்ஸ்தானத்திலும், சிலகாலத்தில் கால் அந்தஸ்தானத்திலுமாக அமைக்கப்படுவதும் முடியாதகார்யம். ஆகவே என்றைக்கும் கால் கால்தான், தலை தலைதான். அததன் வேலையை அது செய்வதுதான் ஒழுங்கேயன்றி மாற்றுவது ஒழுங்காகாது. காலைச்சேற்றிலழுத்தி நடவுமுதலிய காரியங்கள் செய்யப்படுவதுபோல் தலையைசேற்றிலழுத்தினால் மற்ற அவயவங்கள் ஜீவித்திருக்கமுடியுமா? இந்த உதாரணங்களை அனுஸரித்துத்தான் பெரியோர் வர்ணாசிரமப் பிரிவினையையும், அதில் உயர்வுதாழ்வுகளையும், அதற்குரிய விதிவிலக்குகளையும், சாஸ்திர முறைப்படி போதிக்கின்றார்கள். அந்தவழியிலேயே யாவரும் நடந்து சிரேயஸ்ஸை அடைவார்களாக. சுபம். பத்திராதிபர்.

# சாரதா மசோதா கண்டனம்.

காளதுஸ சென்ற புரட்டாசி மீ 3உ திருவானைக்காவல் ஸ்ரீ அகிலாண்டேசுவரியம்பாள் ஸந்நிதியில் ஸ்ரீ கும்பகோணம் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யாளுடைய வித்யாஸ்தானத்தில் வியாகாணஸாஹித்ய உபாத்தியாயரும் மஹோபதேசக கவிரத்னபிருதாங்கிதருமான பிர்மஸ்ரீ ப. பஞ்சாபகேச சாஸ்திரியவர்களுடைய அக்ராஸனத்தின்கீழ் உள்ளூரிலிருந்தும் வெளியூரிலிருந்தும் ஷை சபைக்குவிஜயம்செய்திருந்த சுமார் 300-வரையிலுள்ள பண்டித சிரோமணிகளாலும் லௌகிகோத்தமர்களாலும் மற்றுமுள்ள ஸாமான்ய ஆஸ்திக ஜனங்களாலும் அலங்கரிக்கப்பட்ட மஹாஸபையில் தீர்மானமான விஷயங்கள்.

## 1—மங்களாசரணம்.

1-வது துவக்கத்தில் அருணாசல சாஸ்திரி என்கிற வேதாந்த வித்யார்த்தியானவர் ஸகல பக்தஜனங்களுக்கும் அவரவர்கள் கோரிய விருப்பத்தையளிக்கவேண்டி இயற்கையாய் விளங்கும் கருணையால் இப்புநித க்ஷேத்திரத்தின்கண் தோன்றி விளங்கும் ஸ்ரீ ஜம்புநாதரும் ஸ்ரீ அகிலாண்டேசுவரியும் தர்மத்திற்குக் குறைவு நேருங்கால் இப்புவியிலவதரித்து ஸகலதர்மங்களையும் நன்கு ஸ்தாபித்து அவைகளுக்கு இடையூறை விளைவிக்கும் துஷ்டர்களை சிக்ஷித்து சிஷ்டர்களான ஸாதுக்களையும் பாதுகாப்பதாகப் பிரதிக்ஞை செய்திருக்கிற ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவும் இச்சபையை நன்கு நடத்திவைத்து நம் ஸநாதன தர்மங்களையும் விருத்தியடையும்படி செய்யவேண்டுமென்கிற கருத்துக்கொண்ட இரண்டு மங்களக்கீதங்களைப்பாடி ஸபையோர்களுடைய மனதை பகவத் தியானத்தில் ஈடுபடும்படிசெய்தார்,

## 2—வது அக்ராஸனர் முகவுரைச் சுருக்கம்.

இவ்வுலகில் பகவானால் சிருஷ்டி செய்யப்பட்ட பிராணிகள் பலவிருப்பினும் அவைகளுள்மானிடப்பிறவியே மிகச்சிறந்ததென பலர் கூறுகின்றார்கள். அனுபவத்திலும் அவ்விதமே காணப்படு படுகின்றது. இதரப் பிராணிகளைக்காட்டிலும் அதிகமான ஞானம் இவர்களுக்கிருப்பதுதான் அதற்குக் காரணமாகும்

ஆகையால்தான் சரீரத்தாலும் பலத்தாலும்மேலான கஜம் சிங்கம் புலி முதலான பிராணிகளை இவர்கள் தங்களிஷ்டப்படி நடத்து கிறார்கள். இவ்விதம் உத்தம ஜன்மாவையடைந்த இவர்கள் கெட்டகர்மாக்களைச்செய்து பாபங்களைச் சம்பாதித்துக் கொடிய நாகதுக்கங்களை அனுபவித்து மறுபடியும் பிறப்பு இறப்பென்கிற பெரும்பிணியால் வருந்தக்கூடாதென்று நம்மிடம் கருணைகொண் டவர்களும் மஹான்களாயும் லோகக்ஷேமார்த்தமாகவே அவத ரித்த மனு முதலான மஹரிஷிகள் வேதங்களுடைய தத்வார்த்தங் களை ஸ்மிருதி என்கிற பெயருடன் சுலபமான ஸம்ஸ்கிருத நடை யில் வெளியிட்டு அவைகளின் மூலமாக அந்தந்த வர்ணாச்ரமிகள் அனுஷ்டிக்கவேண்டிய ஸகல தர்மங்களையுமறிவித்து அவரவர் களும் தங்களுக்குற்ற தர்மங்களை அனுஷ்டித்து ஸம்ஸாரதுக்கத்தி லிருந்து நிவர்த்தியடைவதற்கு வேண்டிய முக்கியமானவழியைக் காட்டியிருக்கிறார்கள். அந்த வழியையே சுமார் 40-வருஷத் திற்குமுன்வரையில் பலபெரியோர்கள் நன்றாய்ப்பிடித்துக்கொண்டு நற்கதிபெற்றிருக்கிறார்கள் என்றும் பல நூல்களாலறிவிக்கப்படு கின்றன. இவ்விதம் ஸம்ஸார துக்கத்தைப்போக்குவதற்கு சிறந்த ஸாதனமாய் விளங்கிவந்தநம் ஸநாதந தர்மமென்றகற்பகவிருக்ஷத் திற்கு கலியின் கொடுமையால் கிலாநி ஏற்பட ஆரம்பித்துவிட் டது. ஜனங்களுடைய புத்தியும்கலி தோஷத்தாலும் அதிபாபச் செயல்களாலும் மழுங்கி விவேகமற்று விதவா விவாஹம் ருதுமதீ விவாஹம் தீண்டாமை ஒழிப்பது என்று பெயர்பெற்ற அதர்மச் செயலால் அதின் கிளைகளை முறிக்கவும் தைர்யமாய் பலர் முன் வந்துவிட்டார்கள். இவ்வித கொடுமையானசெயல்களால் ஆஸ் திகர்களுக்கு அதிகமான வருத்தமுண்டானாலும் கிளைகள்போனா லும் வேருடன் அடிமரமிருப்பதால் அதைக்கொண்டு எப்படியா வது விருத்திசெய்துவிடலாமென்கிற நம்பிக்கைக்கொண்டு ஒரு மாதிரி ஸமாதானத்தையும் அடைந்தார்கள். இந்த ஸமயத்தில் சாரதாபில் என்கிற பெருங்காற்று ஒன்று கிளம்பி தர்மகல்பதரு மத்தை அடிவேருடன் பறித்துக்கீழேதள்ளிவிட்டது. இந்தக் காரியத்திற்கு அரசாங்கத்தாரும் ஸகாயமாகச்சேர்ந்துவிட்டார் கள், இதனால் ஆஸ்திகர்களுக்கு அதிக துக்கமேற்பட்டுவிட்டது. அதிலும் பிராமணர்களுக்குச்சொல்லவேண்டியதில்லை, இவ்விதம் அரசாங்கத்தாரும் ஸாதகமாயிருந்து 14-வயதிற்குமுன் ஸ்திரீக ளுக்கு விவாஹம் செய்யக்கூடாதென்றும் செய்தால் அபாரதமு

தண்டனையுமேற்படுமென்று சட்டசபையில் ஆயிருக்கும் தீர்மா னத்தையும் அதனால் பல ஆஸ்திகர்களுக்கு ஏற்பட்டிருக்கும் மன வருத்தத்தைவிலக்கி ஸநாதந தர்மத்தை ஸரியாய் நடைபெறும் படி செய்யவேண்டுமென்று கருணைகொண்டுசட்டசபைத்திருத்த மசோதா ஒன்றை கனம் ராஜாபகதூர் கிருஷ்ணமாசார்யாவர்கள் கொண்டுபோய் அதை அங்கீகரித்து ஸமீபத்தில் அது சட்ட சபைக்கு வரப்போகிறது. ஆகையால் சாரதாசட்டம் எங்கள் மதக்கொள்கைக்கு மிகவும் விரோதமானது. அது பாஸானால் எங்கள் மதமே அடியோடு போய்விடும். அதினால் எங்களுக்கு அதிக கஷ்டங்கள்நேரும். ஆகையால் மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணமா சாரியாவர்களுடைய திருத்த மசோதாவை அங்கீகரித்து காருண் யமுள்ள கவர்ன்மெண்டார் எங்களுக்கேற்பட்டிருக்கும் கஷ் டத்தை விலக்கவேண்டுமென்று அரசாங்கத்தாருக்கு அறிவிக்க வேண்டி இந்த ஸபை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இங்கு விஜயம்செய்திருக்கும் பண்டிதர்களும் மற்றுமுள்ள ஆஸ்திக மஹாஜனங்களும் சாரதாசட்ட மறுப்புவிஷயமாய் சபையில் நடக்கும் உபன்யாஸங்களைக்கேட்டுத் தங்களபிப்ராயங்களை நன்கறிவித்து ஸபையை நன்ருய் நடத்திக்கொடுக்கும்படி கேட் டுக்கொள்ளப்படுகின்றுர்கள் என்று அக்கிராஸனர் முன்னுரையில் அறிவித்தார்.

## பால்யவிவாகம்தான் சாஸ்திரசிஷ்டார ஸம்மதம்.

அனாதிகாலம்தொடுத்து இதுகாறும் ஆஸ்திககுடும்பங்களில் நடந்துவரும் பாலிகா விவாஹமே சுருதிஸ்மிருதி புராணம் இதி ஹாசம் சிஷ்டாசாரம் யுக்திஎன்றும் ஸகலபிரமாணங்களுக்கும் ஸம்மதமாயுள்ளது. முதலில் சுருதியை ஆராய்வோம். யஜுர் வேதத்தைச்சேர்ந்த தைத்திரீயஸம்ஹிதையின் ஏழாம்காண்டத் தில் "பாதம் ஒன்றுக்கு எட்டெழுத்தடங்கிய மூன்று பாதங்களோடுகூடிய காயத்திரீஎன்னும் சந்தஸ்ஸுடன் பிராம் மணஜாதி ஆதியில் ஸிருஷ்டிக்கப்பட்டது,, எனக் கூறப்பட்டிருக் கிறது.

அப்படிக்கூறும்சுருதியின் அபிப்பிராயம் காயத்திரீச்சந்தஸ்ஸின் பாதத்தினுடைய அக்ஷரங்களின் எண்ணிக்கையை அனுஸரித்து எட்டாவதுவயதில் பிராம்மணஜாதியில் பிறந்த புருஷனுக்கு

உபனயனம் செய்விக்கவேண்டுமென்றும் பிராம்மணஜாதி ஸ்திரீகளுக்கு உபனயத்திற்குப் பதிலாகச் சாஸ்திரங்களில் கூறப்பட்டு அவச்யம் செய்யவேண்டியதாயுள்ள விவாஹம் அதே எட்டாவது வயதில் செய்விக்கவேண்டுமென்றும் தெரிவிப்பதே! என வேதார்த்தத்தை நன்குணர்ந்த மஹர்ஷிகளால் கூறப்பட்டு இருக்கிறது.

அவ்விதமே ரிக்வேதத்தில் இரண்டாவது அஷ்டகத்தில் முதல்மண்டலத்தில் பாவயவ்யர் என்பவருடைய பத்னீயானவள் விவாஹமானபின்பு வெகுகாலம் பிரௌடையாகாமலிருந்து பிறகுபிரௌடையாக ஆனாள். அவள்தான் பிரௌடையானபின்பும் தன்னைபாலிகையென நினைத்துத்தன்னை அனுபவிக்கவாராமலிருக்கும் பர்த்தாவினிடம் தான்பிரௌடையாக ஆகிவிட்டதாகவும் போகத்துக்கு உரியவள் என்றும் அதற்குரிய அடையாளங்கள் தன்னிடம் காணப்படுவதாகவும் கூறினவிஷயத்தைத் தெரிவிக்கும் ஸூக்தத்தால் பாலிகாவிவாஹம்தான் சாஸ்திரீயமென நன்குபுலப்படுகின்றது.

அவ்விதமே ஸாமவேதத்தைச்சேர்ந்த சாந்தோக்யோபனிஷத்திலும் உஷஸ்தி என்னும் மஹர்ஷியின்பத்னியை ஆடிகீ அதாவது ஸ்தனம் முதலிய பிரௌடையான ஸ்திரீயின் சின்னங்கள் ஏற்படாதவள் என்று கூறியிருப்பதால் பாலிகா விவாஹமே வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அவ்விதமே தைத்திரீயர்களுடைய கிலமாகிய இதிஹாசத்திலும் சாஸ்தரங்களில் விருஷளீ என கூறப்படுபவளான விவாஹமாவதற்குமுன் பிரௌடையான ஸ்திரீயை விவாஹம்செய்துகொண்டு அதனால் விருஷளீபதி என அழைக்கப்படும் புருஷனைச் சிராத்தம் முதலிய ஸத்கர்மங்களின் மத்தியில் கண்டமாத்திரத்தில் அந்தகர்மங்கள் நஷ்டமாகின்றது எனக் கூறியிருப்பதால் பிரௌடாவிவாஹம் கண்டிக்கப்படுகின்றது.

விவாஹகாலத்தில் உபயோகப்படும் வேத மந்திரங்களில் விவாஹம்செய்துகொள்ளப்படும் கன்னிகையை ருதுமதியாயுள்ள ஸ்திரீயின் லக்ஷணங்களான அவயவஸன்னிவேசங்கள் முதலியவற்றோடு கூடியிருப்பவளாகக் கூறியிருப்பது பிரௌடாவிவாஹத்திற்குச் சாதகமெனச் சிலரது அபிப்ராயம். அதுவும்

தவறு. ஏனெனில் ஸ்பஷ்டமான பிரபலநிஷேத சுருதி வசனங்களால் சாஸ்திரங்களில் பிரௌடாவிவாஹம் கண்டிக்கப்பட்டிருக்கும்பொழுது துர்பலமான சில லிங்கங்களால்பிரௌடா விவாஹத்தை ஸ்தாபிப்பது மீமாம்ஸாநியாயமறிந்த பண்டிதர்களுக்கு அழகன்று. அவ்விதம் லிங்கத்தால் பிரௌடா விவாஹத்தைஸ்தாபிப்பதாயிருந்தால் சில மந்திரங்களில் விவாஹமாகும் கன்யகைபுத்ரனோடுகூடியவளாகக் கூறியிருப்பதால் புத்ரவதீவிவாஹமே சாஸ்திரீயமென ஒப்புக்கொள்ளும்படி நேரிடும். ஆகையால் விவாஹமாகும் கன்யகைக்குப்பிறகு அவயவஸந்நிவேச விசேஷங்களும் புத்ரன் முதலிய பாக்யமும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கும் பிரார்த்தனமந்திரங்களே தவிற விவாஹமாகுங்காலத்திலுள்ளதைக்கூறும் மந்திரங்களல்ல என்று அந்த மந்திரங்களை நன்குபர்யாலோசனம் செய்பவர்களுக்குப் புலப்படாமல் இராது. ஆகையால் பிரார்த்தனகாலத்திலில்லாததைத் தான் பிரார்த்திப்பது வழக்கமாதலின் பிரார்த்தனகாலமாகிய விவாஹஸமயத்தில் அக் கன்யகைக்குப் பிரார்த்திக்கப்படும் பிரௌடாலக்ஷணங்களில்லை என நன்கு புலப்படுவதால் பாலிகாவிவாஹமே சாஸ்திரீயமென மந்திரலிங்கங்களாலும் புலப்படுகின்றது.

இதுபோல் மனுயாஜ்ஞவல்கியர் கௌதமர் முதலிய லோகஹிதைஷிகளான மஹர்ஷிகளுடைய வேதார்த்தத்தையே ஒன்றுசேர்த்து ஸ்பஷ்டமாய்க்கூறும் ஸ்மிருதிகளிலும் எங்கேபார்த்தாலும் ஒரேவிதமாய் ருதுவிற்கிப்பின் கன்யகைக்கு விவாஹம் செய்வித்தால் அவ்விதம்செய்விக்கும் பிதா மாதா முதலியோர் நிந்திக்கத் தக்கவர்களாவார்கள். ப்ரூணஹத்யை அதாவது சிசுஹத்தி என்னும் தோஷத்தை அடைவார்கள். விசேஷமான நரகங்களை அனுபவிப்பார்கள். விவாஹமாகாமல் ருதுவானஸ்திரீ விருஷளீ அதாவது சூத்ரீ அவளை விவாஹம் செய்துகொண்டவன் விருஷளீபதி அவனுடன் பேசக்கூடாது அவனுடன் சாப்பிடக்கூடாது அவன் எப்பொழுதும் ஆசௌசமுடையவன் அவன் பிரும்மஹத்திக்கு ஸமானமான பாபமுடையவன் என்று பிரௌடாவிவாஹத்தை நிந்தித்து ருதுவாவதற்குமுன் விவாஹம் செய்விக்கவேண்டும் 8. 9. 10. வயதுகளில் கன்யகைக்கு விவாஹம் செய்துவைத்தால் கன்யகாதானம் செய்பவர்களுக்கு விசேஷமான நல்லலோகங்கள் கிடைக்கின்றன, கன்யகைக்கு லஜ்ஜை

ஏற்படுவதற்கு முந்தியே விளையாடிக்கொண்டிருக்கும்பொழுதே விவாஹம் செய்விக்கவேண்டும். உத்தமமான வரன் கிடைத்தால் 8. வயதிற்குமுந்தியும் விவாஹம் செய்யலாம். ருதுவிற்குமுன் விவாஹம் கட்டாயம் செய்தேதீரவேண்டும் என்று பாலிகா விவாஹத்தையே கட்டாயப்படுத்தியிருக்கிறது. ருதுவாவதற்கு முன் விவாஹமானது எல்லாவர்ணத்திற்கும் பொதுவானது. ருதுவானதற்குப்பின் ஆபத்தர்மமாக விவாஹத்தை ஸ்மிருதிகளில் ஒப்புக்கொண்டிருப்பது சூத்ரர்களின் விஷயத்தில். பிராம்மணர்களின் விஷயத்திலில்லை.

ஐந்தாம்வேதமெனக் கருதப்பட்ட மஹாபாரதத்தில் சல்ய பர்வாவில் ஸுப்ரூ என்னும் ரிஷி கன்யகையானவள் கிழவியான பின்பு தனக்கு விவாஹம் செய்துகொண்டதாகக் கூறப்பட்டிருப்பதால் ருதுவானபின்பும் விவாஹம் சாஸ்திரீயமென்று சிலரது அபிப்பிராயம். அதுவும் உசிதமன்று. ஏனெனில் இவ்விதம் அகார்யத்தை ஒருவர்செய்ததாகத் தெரிந்தால் எல்லோரும் அவ்வித அகார்யத்தைச் செய்யவேண்டுமா? ருதுமதீ விவாஹம் அகார்யமென்பது ஸ்மிருதிகளில் வெளிப்படை. மேலும் ஒருகதையை வைத்துப் பிரத்யக்ஷநிஷேத வசனங்களால் விலக்கப்பட்டு அதர்மமாயுள்ளதை எப்படிச்செய்யலாம். மேலும் பாரதத்திலேயே ஸுப்ரூ என்பவளின் சரித்திரத்தை நன்கு ஆலோசித்துப்பார்த்தாலே ருதுமதீ விவாஹம் கூடாதெனவிளங்கும். ஸுப்ரூ என்பவள் விசேஷமான தபஸ் செய்தவள் அவள் தனக்கு அனுகுணமான வரன் கிடைக்காததால் விவாஹம்செய்து வைக்கமாதாபிதாக்கள் பிரயத்னப்பட்டும் அதைத்தடுத்துவிட்டு இருந்தாள். இப்படியிருந்த இவளை ஒருஸமயம் நாரதர்கண்டு நீ எவ்வளவு தபோமஹிமையுள்ளவளாயிருந்தாலும் ஸரியானகாலத்தில் விவாகமாகாதபடியால் பரலோகம் உனக்கு இல்லையென்று உபதேசித்தார். பிறகுஸுப்ரூவானவள் நடுங்கித்தனது தபோமஹிமையால் பாலிகா ரூபத்தை மறுபடியும் அடைந்து தனது தபஸ்ஸில்பாதியை ஒருவரிடம்கொடுத்து அவரைமணந்து பிறகுகாலாந்தரத்தில் லோகாந்தரத்தை அடைந்தாள் என்று கதை பாரதத்தில் கூறப்பட்டதை நன்றாய்ப்பார்த்தாலே பிரௌடாவிவாஹம் அதர்மமென விளங்கும்.

இவ்விதமே ஆபஸ்தம்பர் போதாயனர் முதலிய மஹர்ஷி களது கிருஹ்ய ஸூத்ரங்களையும் பாமர்சித்தால் பாலிகாவிவாகம் தான் சாஸ்திரீயமென விளங்காமல் போகாது. மேலும்ருதுவான பின்பு விவாஹம் செய்யப்பட்ட ஸ்திரீயினிடத்தில் பிறந்த சிசு பிராம்மண்யத்தையே இழந்து விடுவதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதமே பிராசீனர்களான சிஷ்டர்களும் இதுவரையில் பாலிகா விவாஹத்தை ஆசரித்து வந்திருக்கிறார்கள். இவ்விதமே யுக்திக்கும் பாலிகாவிவாகம்தான் ஒத்திருக்கிறது. குழந்தைகள் கன்யகையாக இருக்கும்பொழுதே அக்குழந்தையின் நன்மையைக் கருதினவர்களாயும் லோகானுபவமுள்ளவர்களாயுமுள்ள மாதாபிதா முதலியோர்களால் தகுந்த வரனைத்தேடி விவாஹம் செய்துவைத்தால் பிறகு அக்குழந்தை தனது பர்த்தாவினிடத்தில் நாளுக்குநாள் விசேஷமான அபிமானத்தை அடைந்து தனக்குக்கிடைத்த பர்த்தா எவ்விதமிருப்பினும் தன் வயிற்றில்பிறந்த சிசு எவ்விதமிருப்பினும் மற்ற குழந்தைகளைவிட அதிலேயே அதிக அன்பு இருப்பதுபோல் தனது பர்த்தாவையே தைவமாக எண்ணி அவனிடத்திலேயே அதிக அன்புபாராட்டி அவ்யபிசரிதமான நடையை உடையதாயிருக்கும். அவ்விதமில்லாமல் பிரௌடையானபின் ஸ்திரீயின் இச்சையை அனுஸரித்து விவாஹம் செய்வதானால் அவள் தனது காமத்தை அனுசரித்துக் குலகோத்ரம் பாராமல் ரூபத்தைமாத்திரம்பார்த்து ஒருவனை இச்சிப்பள். பிறகு அவனைவிட மற்றொருவன் ரூபவானாயிருப்பதாகக்கண்டால் அவனை இச்சிப்பள். இவ்விதம் வஸ்திரம் ஆபரணம் முதலியதை மேல்மேல் உயர்ந்ததாகக்கண்டால் ஆசை மாறிமாறிவருவதுபோலவே புருஷனிடத்திலும் லோகானுபவமில்லாததால் குணதுணங்களைப்பார்க்காது ரூபத்தைக்கண்டு மயங்கிமேன்மேல் ஆசைகொண்டு கடைசியில் ரொம்பவும் மட்டமானவனைத்தீர்மானித்து விவாஹம்செய்துகொள்ள நேரிடும். பிறகு பலவித கஷ்டங்களுக்கு உள்படவேண்டியிருக்கும். பல தோஷங்களும் ஸம்பவிக்கும். பாலிகாவிவாகத்தில் இந்த தோஷம் ஸம்பவிக்காது. பாலிகா விவாகம்செய்தபோதிலும் சாஸ்திரங்களில்கூறும் நியமங்களையும் பெரியோர்களது கட்டுப்பாடுகளையும் அனுஸரித்து அடிக்கடி ஸம்போகத்தைச்செய்யாமலிருந்தால் தம்பதிகளுக்கும் அவர்களது குழந்தைகளுக்கும் பலக்குறைவு முதலியது ஏற்படாது.

விவாஹமானவுடன் பெரியோர்களது பழக்கத்திலிராமல் தனிக் குடுத்தனம்போடும் தத்கால மனுஷ்யர்களுக்குத்தான் இவ்விதம் பலக்குறைவுகள் நேரும். முன்காலங்களில் பாலிகா விவாஹம் செய்துகொண்டவர்களும் அவர்களது குழந்தைகளும் பலிஷ்டர் களாகவே இருந்ததாக நன்கு தெரிகிறது.

பால்யத்திலேயே விவாஹம்செய்தால் ஒருஸமயம் புருஷன் தவறிப்போய்விட்டால் வைதவ்யம் நேரிடுகிறதே என்றால் இது பிரௌடாவிவாஹத்திலும் வரக்கூடியதுதான் பிரௌடையான பின்பு விவாஹம்செய்தால் யமன் பயப்படுவானா? பிரௌடையா னவள் புருஷனை அனுபவித்தபிறகு புருஷன் தவறிவிட்டால் காமாவேசத்தால் மற்றொருபுருஷனோடு சேர்ந்து கெட்டும்போ கலாம். பாலிகாவிவாஹத்தில் புருஷனை அனுபவிக்குமுன் அவன் தவறிவிட்டால் புருஷானுபவமேதெரியாத அவள் கெடாமல் இருக்கலாம். பொதுவாகப் பெரியோர்களுடைய உபதேசத் தாலும் தனக்குரிய படிப்புகளாலும் நல்லபழக்கங்களாலும் விதவைகளான ஸ்திரீகள் தனக்குரிய ஆசாரங்களைச்செய்து கொண்டு ஒழுங்காகவே முன்காலங்கள்போல் இருக்கலாம் மேலும் பால்ய வைதவ்யம் ஸ்திரீகளுக்கு ஏற்படுவது எதனா லென்று கவனிக்கவேண்டும். புருஷன் தவறுவதால் என்றால் அவன் இறந்துபோவானேன் என்று சீர்திருத்தக்காரர்கள் டாக்டர்கள்மூலம் பரிசோதித்துப்பார்க்கட்டுமே. அது அவர்க ளுக்குப்புலப்படவில்லையே என்றால் அதுவிஷயத்தில்பிராசீனமான மஹர்ஷிகள் நியமப்படி அத்யயனம் செய்யாததாலும் ஆஹார நியமமில்லாததாலும் ஸரியானபடி தர்மானுஷ்டானம் இல்லாத தாலும் அனாசாரங்களாலும் அதர்மங்கள் அதிகமாக இருப்ப தாலும் அடிக்கடி அகாலமரணங்கள் ஸம்பவிக்கின்றன எனக் கூறுகின்றார்கள். முன்காலங்களில் இவ்விதம் அகால மரணங்கள் கிடையாது. இப்பொழுதுதான் அதிகமாகக் காணப்படுகிறது. அதன் காரணங்களை நன்கு அறிந்து அதுகளைவிலக்கினால் பால்ய வைதவ்யமே நேரிடாது. அப்படியில்லாமல் பிரௌடாவிவாஹத் தை நிலைநாட்டினால் அகாலமரணம் அதிகமாக ஏற்படும். அப்பொ ழுது ஸ்திரீகளுக்கு அடிக்கடி வைதவ்யம் நேரிடும். அவ்விதம் நேர்ந்தாலும் சீர்திருத்தக்காரர்கள் ஒருவாறு வைதவ்ய தோஷத் தைப் பரிஹரிக்கலாம். அதாவது ஸ்திரீகளுக்கு இவ்வளவு பர்த்

தாதான் என்கிற நியமமில்லாமல் புருஷன் இறந்துபோகப்போக மற்றொரு புருஷனை விவாஹம் செய்துகொண்டு ஸ்திரீகள் விதவைகளாகாமலேயே இருக்கக்கூடும். இவ்விதம் செய்யும்பக்ஷத்தில் பாலிகா விவாஹத்தைத் தடுப்பானேன்? பாலிகா விவாஹம் நடந்தபின்பு புருஷன் இறந்துபோனால் வேறொருபுருஷனை விவாஹம்செய்துகொள்ளலாமே, ஆகையால் யுக்திக்கும் பாலிகா விவாஹம்தான் ஸரியானது. ஆகையால் ஸகல பிரமாணங்களுக்கும் ஸம்மதமாய் இதுகாறும் நடந்துவந்ததும் ஸர்வ தர்மங்களுக்கும் மூலமாயும் உள்ள பாலிகாவிவாஹத்தைச் சாரதாசட்ட மூலம் கண்டித்து வர்ணாசிரம தர்மாபிமானிகளான பிரஜைகளது மனதைப் புண்படுத்தாது மாக்ஷிமைதங்கிய மஹாராணி விக்டோரியா சக்ரவர்த்தினியின் மேன்மைபொருந்திய மதத்தில் ராஜாங்கம் பிரவேசிக்காது என்னும் வசனாமிருதத்தைப் பரிபாலித்து எங்களை எங்களது மதத்தின்படி அனுஷ்டிக்கச்செய்து பரிபாலிக்கவேண்டுமென்று மாக்ஷிமைதங்கிய நமது சக்ரவர்த்தி அவர்களைநாம் வணக்கத்துடன் பிரார்த்திப்பதோடு அவர்களுக்கு அவ்விதம் தோன்றும்படி அருள்புரிய வேண்டும் என்று அகிலாண்டேசுவரீஸமேத ஜம்புநாதனைப் பிரார்த்தித்துக்கொண்டு இத்துடன் எனது உபன்யாஸத்தை உபஸம்ஹரிக்கிறேன்.

சுபம்

ஸ்ரீஜகத்குரு வித்யாஸ்தானம் வேதாந்தோபாத்யாயர்
போலகம் சு. ஸ்ரீராமசாஸ்திரிகள்.

---

## விவாஹம் மதஸம்பந்தமானதுதான்.

இந்த சாரதா மசோதாவை சட்டஸபையில் அங்கீகரித்து பாஸ்செய்தது கனம் விக்டோரியாமஹாராணி அவர்களால் மத ஸம்பந்தமானகாரியத்தில் தாம் பிரவேசிப்பதில்லை என்று செய்யப்பட்டிருக்கும் வாக்குறுதிக்கு மாறுதலாயிருப்பதால் இதை ரத்து செய்யவேண்டுமென்று பல ஜனங்களாலும் கேட்டுக்கொள்ளப்படும்பொழுது யாரோ ஒரு சிலர் விவாகமென்பது மதஸம்பந்தமானதல்ல என்று சொல்லுகிறபடியால் அதைப்பற்றி விசாரிக்கிறோம். இங்கு மதம் என்கிறபதத்திற்கு யாது பொருளென்று

மூந்தி விசாரிக்கவேண்டியது. மதமென்கிற பதத்திற்கு அபிப்பிராயம், இஷ்டம், கொள்கை, என்பவைகளையே பொருளாகக் கொள்ளவேண்டும். இவைகளைவிட்டு வடமொழியிலுள்ள இப்பதத்திற்கு வேறு கருத்துரைப்பதற்கில்லை. கொள்கை என்கிற பொருளை நாம் எடுத்துக்கொள்வோம். அவ்விதமெடுத்துக்கொண்டால் யாருடையகொள்கை என்று ஒருகேள்வி ஏற்படும். அந்த மதஸ்தர்களுடைய ஆசார்யாளுடையவும் அவர்களால்பிரமாணங்களாக அங்கீகரிக்கப்பட்டடிருக்கின்ற வேதம், ஸ்மிருதி, பைபிள், முதலானவைகளுடைய கொள்கை என்றுதான் முக்கியமான பொருள். இக் கருத்தைக்கொண்டுதான் கிருஸ்தவர்கள் முஸல்மான்கள் முதலான மதஸ்தர்கள்கூட எங்கள்மதத்தில் இவ்விதம் தான் அனுஷ்டிக்கச் சொல்லியிருக்கிறதென்று விவாஹம்முதலிய கார்யங்களை வெவ்வேறுவிதமாக அனுஷ்டிக்கிறார்கள். அவ்விதமே ஹிந்துக்களுக்கும் அவர்கள் ஆசார்யர்களாலும் வேதம் முதலான நூல்களாலும் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையே மதமாகும். ஹிந்துமதமென்றால் அதற்கு ஆணிவேராய் நிற்பது இந்த விவாஹகர்மந்தான்! இதை மதக்கொள்கைப்படி ஸரியாய் ஒருவன் அனுஷ்டிக்காவிட்டால் அவன் ஹிந்துமதத்திற்குரிய தர்மங்களை அனுஷ்டிக்க அருகனுகமாட்டான். அவனை ஹிந்துவாகக்கூட கருதமாட்டார்கள். ஹிந்துமதம் என்கிற புருஷனுக்கு சிரஸ்ஸாக இருப்பது இந்த விவாஹகர்மாதான்! ஆகையால் அவரவர்களையும் தங்கள் மதப்படி விவாஹத்தை அனுஷ்டிக்கும்படி செய்து மத தர்மங்களையும் விருத்திபண்ணி சாரதாசட்டத்தையும் ரத்துசெய்யவேண்டுமென்று நாங்களனைவரும் பன்முறை கவர்ன்மெண்டார் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறோமென்றுகூறி உபன்யாஸத்தை முடித்துக்கொண்டார்கள்.

ஸ்ரீராமஸ்வாமிசாஸ்திரிகள்,
அத்தாளைநல்லூர்.

---

### பால்யவிவாகத்தால் பலகஷ்டங்கள் நேருகின்றன என்று சாரதா முதலானவர்கள் சாற்றியது முற்றிலும் தவறு.

---

சாரதாவும் அவர்களைப் பின்பற்றும் மற்றும் சிலரும் வங்காளத்திலும் ஐதராபாகம் முதலான விடங்களிலும் சமீபத்தி

லுள்ள ஜனகணதி கணக்கைப்பார்த்தால் பால்யவிதவைகளாக 30000 பேர்கள் வரையிலிருப்பதாகத்தெரிகின்றது. அவர்களுக்கு மனம் எப்படியாகிலும் இந்த ஜன்மாவிற்கேற்பட்ட இல்லற சுகத்தை அனுபவிக்கமுடியாமல் எவ்வளவு கஷ்டப்படும். இப் பெரியகஷ்டம் இந்த மசோதாவினல் விலகிவிடும் என்று இதைச் சிறந்த பயனுக கருதுகிருர்கள்—அது சரியான காரணமல்ல. பால்யவிதவைகளின் சங்கியை அதிகமாகவிருக்கலாம். அது பால்யவிவாகத்தால்தான் ஏற்பட்டதென்று எப்படிக்கூறமுடியும், பால்யவிவாகம் என்பது வரனைக்கொல்வதற்காக ஏற்பட்ட ஆபி சாரப்பிரயோகமா? இதில் செய்யப்பட்டிருக்கிற ஹோமமும் வரனைக்கொல்வதற்காகவா செய்யப்படுகின்றது, உலகிலுள்ள ஸகல ஜனங்களும் தமதருமைப் புதல்வனுக்கு இதற்காகத்தானு விவாகம் செய்கின்ருர்கள். அப்படியிருந்தால் சிலர்கள் சவுக்கிய மாயிருக்கிருர்களே அவர்களுக்கேன் இந்த கஷ்டம் நேரவில்லை. அந்தோ என்ன பேதமை பாருங்கள். உலகில் யாராவதுதான் மறிக்கவேணுமென்று ஏராளமான பொருளைச் சிலவிட்டு ஒரு கார்யத்தைச் செய்வார்களா? அவ்விதம் செய்யவேணுமென்று ஈச்வராக்ஞாரூபங்களான வேதம் முதலியதான பிரமாணங்கள் தான் கூறுமா? அதை முக்காலமுமறிந்த முனிவர்கள்தான் அங் கீகரித்து ஸ்மிருதிகளிலும் தர்மஸூத்திரங்களிலும் பேசுவார் களா? மேல்கூறும் விஷயத்தைச்சற்று கவனிக்கவேண்டும். இந்த பால்யவிவாகமேற்பட்டு பதினுயிரக்கணக்கான வருஷங்கள் ஆயி ருக்கின்றன. இது ஸ்திரீகளின் வைதவ்யத்திற்கு காரணமாயி ருந்தால் எந்தஸமயம் துவக்கப்பட்டதோ அன்றுமுதல் அக்கார ணமிருந்தே தீரவேண்டும். அவ்விதமிருந்ததாகத்தெரியவில்லை. தற்காலம் உலகில் திருடமான சரீரத்தோடு வாழ்ந்துகொண்டி ருக்கும் ஸகலமனுஷ்யாளும் பால்யவிவாகத்தால் உண்டானவர் கள்தான். அற்பகாலமாக உலகில் ஏற்பட்டிருக்கும் அதர்மத் தாலும் குரூரமான பாபங்களாலும் அகாலமரணமும் பிளேக் முதலான ரோகங்களும் ஏற்பட்டு ஜனங்கள் கஷ்டப்படுகிருர்க ளென்பதை அறியாமல் சாஸ்திரீயமாயும் அனுதி காலமாகவும் நடைபெற்றுவரும் பால்யவிவாகத்தையா இதற்கு பலிகொடுக் கிறது. என்ன அநியாயம். 9.வயதுமுதல் 12-வயதுவரையில் தற்காலம் விவாககர்மா நடைபெருகின்றது. இது கூடாது.

14-வயதில் தான் நடத்தவேண்டுமென்று இவர்கள் கருத்தின்படி நடத்தினுல் அக்காலத்திலும் இந்தக் கஷ்டம் ஏன் ஏற்படக் கூடாது. சாரதாமுதலானவர்கள் இயமனிடம் 14-வயதுக்குப் பிறகு விவாகமாகும் ஸ்திரீகளுடைய புருஷர்களை நான் பீடிக்க வில்லையென்று இக்ரிமெண்டு எழுதி வாங்கியிருக்கிருர்களா? அப் படியிருந்தால் ஏன் அதை வெளியிட்டிருக்கக்கூடாது. இவ்விதம் பால்ய விவாகத்தால் என்னென்ன கஷ்டங்கள் நேருகின்றன வென்று இவர்கள் கூறுகிருர்களோ, அவையாவும் புத்திமான்கள் பரிஹஸிக்கும்படி தானிருக்கும். தற்காலம் நம்தேசத்திற்கு நேர்ந் திருக்கும் எவ்விதக் கஷ்டங்களுக்கும் அதர்மம்தான் காரண மாகும். இக்கருத்தையே வேதாத்யயனமில்லாததினுலும் ஆசா ரத்தைக்கைவிட்டபடியாலும் சோம்பலாலும் கண்டவிடங்களி லும் எவ்வித ஆகாரங்களையும் புசிப்பதாலும் அகாலமரணங்கள் ஸம்பவிக்கின்றனவென்றும் கூறியிருக்கிருர். ஆகையால் ஸகல ஜனங்களும் எவ்வித ஆபத்துநேர்ந்தாலும் அவரவர்கள் தர்மத் தைக்கைவிடாமல் அனுஷ்டித்து சுகித்திருக்கவேண்டியதென பதை அறிவித்து இத்துடன் நிருத்திக்கொள்ளுகிறேன்,

ஸ்ரீ ஜகத்குரு வித்யாஸ்தானம் வேதாந்தவித்யார்த்தி
அத்தாழநல்லூர் ஸ்ரீகிருஷ்ணசிரௌதிகள்.

---

குறிப்பு:—இந்த ஸமயத்தில் திருச்சியிலிருந்துவந்த ஆனேஷ் பி. ஏ. ஒருவரால் செய்யப்பட்ட இரண்டு வினக்களுக்கு ஸ்ரீ ஜகத் குரு வித்யாஸ்தானம் வேதாந்த வித்வான் பிர்மஸ்ரீ ராமசாஸ்திரி யாலும் அக்ராசனாவர்களாலும் அளிக்கப்பட்ட விடையைச் செவியுற்று அவர்மகிழ்ந்தார்.

---

## விவாககர்மாவை விதிப்படி அனுஷ்டிக்காவிட்டால் பிராம்மண்யமே விலகிவிடும்.

பிர்மசாரி கிருகஸ்தன், வானப்ரஸ்தன், ஸந்நியாஸி, என்கிற நான்குவித ஆச்ரமிகளுக்குள் வானப்பிரஸ்தாசிமிதவிர மூன்று ஆசிரமிகள் உலகில் பிரஸித்தமாயிருக்கின்ருர்கள். அவர்களுக்குள் பிர்மசாரியும், ஸந்நியாஸியும் தனக்குவேண்டிய கர்மாக்களை

மாத்திரம் செய்துகொள்வார்களேயன்றி லோகோபகாரமான தர்மானுஷ்டானங்களைச் செய்ய அவர்களுக்கு அதிகாரமில்லை. ब्रह्मचारी गृहस्थश्चपकान्नस्वामिनावुभौ பிர்மசாரியும் யதியும் கிருகஸ்தனால் பாகம்செய்துவைக்கப்பட்ட அன்னத்திற்குப்பாகஸ்தர்கள் என்று சாஸ்திரங்களும் கூறுகின்றன. கிருகஸ்தாகள்தான் தர்மானுஷ்டானத்திற்கு அருகர்களாகிறார்கள். அந்த கிருகஸ்தாசிரமம் ஸித்திக்கவேண்டுமானால் ஸ்திரீ இல்லாமல் ஸித்திக்காது. அந்தஸ்திரீயையும் சாஸ்திரங்களில்கூறிய விதிப்படி கிரகித்தால், தான் தர்மானுஷ்டானத்திற்கு அருகனாகிறான். பிராமண்யமும் ஸித்திக்கும். பல.ஸ்மிருதிக்காரர்கள் ருதுவாகிறதற்கு முந்தியே ஸ்திரீகளை விதிப்படி விவாஹம் செய்துகொள்ளவேண்டும். அவ்விதமின்றி ருதுவானபிறகு விவாஹம் செய்துகொண்டால் ருதுவான பிராமணஸ்திரீ சூத்திரஸ்திரீக்கு ஸமானமென்றும், அவளை மணம்புரிந்தவனும் சூத்திரஸ்திரீயின்பதிஎன்றும், அவன் பிராமணனே அல்லவென்றும், அவனோடுபேசுவதும், கூட சாப்பிடுவதும், கூடாதென்று ஸ்மிருதிகளில் ஸ்பஷ்டமாய் நிஷேதிக்கப்பட்டிருக்கின்றது. சாரதாசட்டப்படி 14.வயதானபிறகு ஸ்திரீகளுக்கு விவாஹம் செய்கிறதாயிருந்தால் ருதுவானவளாகத்தான் இருப்பாள். அவளை விவாஹம் செய்துகொள்ளுகிறவன் பிராமண்யத்திலிருந்தும் நழுவிவிடுகிறான். வைதிகமான தர்மானுஷ்டானத்திற்கு ஒன்றுக்கும அவன் அருகனல்ல. ஆகையால் சாரதாமசோதா சகலதர்மங்களுக்கும மூலகாரணமாய்விளங்கும் பிராமண்யத்தை அடியோடு நாசம்செய்கிறபடியால் அதைக் கண்டிக்கவேண்டியது மிகவும் முக்கியமே. அவ்விதம் மசோதா பாஸானாலும் நாம் சாஸ்திரப்படி விவாஹத்தை அனுஷ்டித்து அதனால் எவ்விதகஷ்டம் நேர்ந்தாலும் நாம் அனுபவிக்கத் தயாராயிருக்கவேண்டும் என்று என்னுடைய அபிப்பிராயம்.

கனபாடி ஸுப்பிரமணிய தீக்ஷிதர்.

---

## வரசுல்க்கம் வாங்குவதுகூடாது

அதாவது கல்யாணகாலத்தில் வாசுல்கம் (எதிர்ஜாமீன்) வாங்குவது என்கிற இந்தக்கெட்ட வழக்கமானது கொஞ்சகாலமாய்

நம் தேசத்தில் தலைவிரித்தாடுகின்றது. இது ஏற்பட்டு 50-வருஷ காலமானாலும் வெகுதூரம் விருத்தியடைந்துவிட்டது. இது சாஸ்திரத்தில் விதிக்கப்படவில்லை. யாரோ ஐச்வர்யவானான ஒருவர் ஸந்தோஷத்தால் முந்தி இக்காரியத்தைத் துவக்கினார். அதிலிருந்து ஏலத்தில் ஸாமான்விலை ஏறுவதுபோல் ஒவ்வொரு நிமிஷமும் விருத்தியடைந்துவந்துகொண்டிருக்கிறது. தற்காலமிருக்கும் நிலைமையை கவனிக்குமளவில் எவ்வளவு ப்ரபுவாகவிருந்தாலும் பெண் குழந்தை இரண்டு உண்டானால் அவைகளுக்கு விவாகம் செய்தாக வேண்டுமே என்று மனம் கலங்கி சரீரம் குன்றி உத்ஸாஹமில்லாமல் ஏங்கிப் பித்தனைப்போல் சுவாதீனமில்லாதவனாக ஆகிவிடுகிறான். பிள்ளைவீட்டுக்காரர்களும் என் பிள்ளைக்கு விலை ரூபாய் 3000-தான் கொடுக்கவேண்டுமென்கிறார்களேதவிர தம் நிலைமையைக் கொஞ்சங்கூட யோசிப்பதேயில்லை, மாதம் 1க்கு மூன்று ரூபாய் சம்பளத்திற்கு மிட்டாய்க்கடையில் மாவு அறைத்து ஜீவனம் செய்யும் ஓர் அம்மையார் தன் புத்திரனுக்கு 1000ரூபாய் வரசுல்க்கம் கேட்டுவருகிறாள். என்ன அனியாயம் பாருங்கள், வரசுல்க்கம் என்ற இந்தப் பேய் உலகில் சுற்ற ஆரம்பித்ததுமுதல் குலம், கோத்ரம், பந்து, குணம், கௌரவம், ஜாதி, வயது, வித்யை முதலான சாஸ்திரவிதிகளை அற்பமும் கவனியாமல் கேவலம் **सर्वेगुणाः काञ्चनमाश्रयन्ति ।** என்று பொருளிருந்தால் போதும், அதிலேயே ஸகலமும் அடங்கிவிட்டது என்று பெரியார் பரிஹாஸமாகக் கூறியிருக்கும் வாக்கானது இச்சமயம் வேதவாக்யமாக விளங்கிவருகிறது. பணம் யார் அதிகமாக வாங்குகிறானோ அந்த ஸமயத்தில் குலவருத்தம், குணப்பொருத்தம், மனப்பொருத்தம், ஜாதகப்பொருத்தம் முதலிய ஸகலமான பொருத்தமும் தாமாகவே வந்துசேர்ந்துவிடுகின்றன. இப்பேர்க்கொத்த பாபியால் மிகவும் கௌரவம்பொருந்திய பல பெரிய குடும்பங்களும் மிகவும் சிரமப்படக்கூடிய நிலைமைக்குவந்து **एकः पापानिकुरुते फलं भुङ्क्ते महाजनः** என்கிறபடி ஒருவன் பாபம் செய்ய அது அநேகம் பெரியவர்கள் அதன் பலத்தை அனுபவிக்கிறார்கள் என்றபடியேயிருக்கின்றது. 40-வருஷத்திற்குமுன் கல்யாணமென்றால் எவ்வளவு ஸந்தோஷமும் உத்ஸாஹமுமிருக்குமோ அது பூருவும் போய் அதற்கு நேர் மாறுதலாய் எதிர்பாராத பெரிய துக்கம் நேரிடுவதாக ஆய்விட்டது. அதிகமாகப் பணம் வாங்குகிறவர்களும்

மேளம் பாட்டு ஸதிர் கதை நகை வேஷ்டி புடவை முதலானவை களில் அனுவச்யமாய் கிரமத்திற்குமேல் செலவிட்டு இந்தப் பணம் போருமல் (முதலில் வாங்கின பணம் போருமல்) மறுபடியும் ஏருளமான பணம் கடன் வாங்கிச் செலவிட்டுக்கடைசியில் பார்க் குமளவில் கடன்காரர்களாகவும் ஆய்விடுகிருர்கள், அந்தோ! அந்தோ!! கொடுமையிலும் கொடுமை!!! கலியின் விந்தையை எங் ஙனம் கூறுவோம்? ஆகையால் ஸபையில் விளங்கும் ஹா ஆஸ்திக மஹாஜனங்களே! சாரதாமசோதாவையும் வாசுல்க்கம் என்கிற இந்த இரண்டு மகாபூதத்தையும் இவ்வுலகைவிட்டு விறட்ட எவ்வ ளவு ஏற்பாடுகள் வேண்டுமோ அவைகளைச் செய்தாலன்றி நமது தாய்நாடு (பாரதநாடு, க்ஷேமத்தையும் முன்னேற்றத்தையுமடைய முடியாது. அவ்வித முன்னேற்றத்தையும் க்ஷேமத்தையும் கருது கின்ற நாம்எல்லாரும் எவ்விதமாகிலும் இவ்விரண்டையும் துலைக்க வேண்டிய விஷயத்தில் நாமனைவரும் தீவிரமுயற்சி எடுத்துக் கொண்டு இரண்டையும் துலைக்கவேண்டுமென்று தெரிவித்துக் கொள்வதுடன் எனது சொற்பொழிவையும் முடித்துக்கொள்ளு கிறேன்.

வேதாந்தவித்யார்த்தி பீ. கே. வைத்யநாதசாஸ்திரிகள்.

---

ஆர்யர்களே, ஹிந்துமதாபிமானிகளே; புண்ணியபூமியாகிய இப் பாரதநாட்டில் தர்மானுஷ்டானங்களெல்லாம் மறைந்து அதர்மானுஷ்டானங்களே தலையெடுக்க ஆரம்பித்துவிட்டன. இதுவும் கலியின் கோலம். அதர்மானுஷ்டானத்தினலேயே உத்பாதங்கள் காலரா, பிளேக் முதலிய கொடிய நோய்களும், க்ஷாமங்களும் ஏற்படுகின்றன. தர்மானுஷ்டானத்தால் அவைகள் நிவர்த்தி அடைகின்றன. இதையே சரகாசாரியாரும் "கொடிய நோய்கள் உண்டாவதற்குக் காரணம் அதர்மானுஷ்டானமே என்று கூறியவிடத்து அவற்றை அறவே விலக்கும் திறமை வாய்ந்த அருமருந்தாக "உண்மையே பேசுதல், பிராணிகள்மீது தயை, தானம், தேவதார்ச்சனம், தர்மத்தை அனுஷ்டித்தல்,, என இவைகளை உபதேசித்தருளினர். இக் காரணங்களைக் கொண்டே மனு, யாக்ஞவல்கியர், முதலிய மஹரிஷிகள் அதர் மத்தை விலக்கி தர்மத்தை அனுஷ்டிக்கும்படி நமது சௌகர்யங்

களுக்குத் தகுந்தவாறு சிறியார் முதல் பெரியோர்வரையிலும் எளியார் முதல் தனவந்தர் வரையில் அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களை அவரவர்களுக்கு அனுகுணமாக நன்கு உபதேசித்திருக்கின்றனர். இங்ஙனமிருக்க,

சில சீர்திருத்தக்காரர்கள் विनाशकाले विपरीतबुद्धिः எனும் "ஆபத்து வருங்கால் அதற்கனுகுணமாக விபரீத புத்தியும் தோன்றும், என்கிற ஆன்றோர் கூற்றுக்கிணங்க நமது நலத்தைக் கருதியே மஹான்களாகிய மஹரிஷிகள் இவ்விதம் கூறியிருக்கின்றார்கள். என்ற நன்றியை மறந்து ஸநாதன தர்மங்களை அறவே துறந்து, மதிமயங்கி, பெரியோர்களைப் புறங்கூறி, தீண்டாமைஒழித்தல், விதவாவிவாஹம், ருதுமதீ விவாஹம், முதலிய அதர்ம லதையை ஆங்காங்கு ஓங்கும்படி செய்துகொண்டு இவ்விதம்செய்வதே நமது க்ஷேமத்திற்கு முக்கிய ஸாதனமெனக் கூறி உலக க்ஷேமத்திற்குச்சாதனமாயுள்ள தர்மத்தை பொதுநன்மைக்கு இடையூறுயுள்ளதென்னப் பறைசாற்றி, அத்தகைய உயர்ந்த தர்மத்தை வெகுதூரத்திற்கப்பால் ஓட்டி, மிகக்கொடிய கஷ்டங்களுக்குக் காரணமாக அதர்மத்தையே நமது சுகத்திற்குற்ற ஸாதனமென நிலைநாட்டி அனுஷ்டிக்க முன்வந்து விட்டார்கள். இந்த அதர்மானுஷ்டானங்களுள் ஒன்றான தீண்டாமை ஒழித்தல், என்பது அனுசிதம் என்பதையும் அதனாலுண்டாகும் கெடுதல்களையும் எடுத்துரைக்க விரும்புகிறோம். அதாவது சண்டாளன் என்பவன் ஸங்கரஜாதியிலுதித்தவன். அவன் மிகவும் பாபங்களால் அந்தஜன்மாவை அடைந்திருக்கிறான். உபநயனம்முதலிய விசேஷ தர்மஹீனன். இதையே கௌதமரும் अन्त्यःपापिष्ठः, धर्महीनः என்று கூறியிருக்கிறார்.

மேலும் சாந்தோக்யோபநிஷத்தில் ஐந்தாவது அத்யாயத்தில் "அக்னிஹோத்திரம் முதலிய கர்மானுஷ்டானங்களால் ஏற்பட்டபலனை அனுபவிக்க ஸ்வர்க்கலோகம்சென்று அனுபவித்துத் திரும்புங்கால் பாபகர்மாவின் மிகுதியால் நாய் ஜன்மாவையாவது பன்றி ஜன்மாவையாவது சண்டாள ஜன்மாவையாவது அடைகிறான்" என்று கூறப்பட்டிருக்கிறது.

மேலும் மனுஸ்மிருதியில்மனுவானவர் பிரதிலோம ஜாதியை, கூறுமிடத்தில்

आयोगवश्च क्षत्ता च चांडाळश्चाधमो नृणाम् ।

ஆயோகவன், க்ஷத்தா, சண்டாளன் இம்மூன்றுபேர்களும் மானிடஜாதிகளில் தாழ்ந்தவர்கள்என்றுகூறியிருக்கிறார், இவ்விதம்கூறி

चण्डालश्वपचानां तु बहिर्ग्रामात् प्रतिश्रयः ।

சண்டாளன் சுவபசன் இவர்களுக்கு கிராமத்திற்குவெளியில் குடியிருத்தல்முதலிய அவன அனுஷ்டிக்கவேண்டிய தர்மங்களையும் கூறியிருக்கிறார். தேவலர் சொல்லுவதாவது

चण्डालभपकुंडस्थ मज्ञानादुदकं पिबेत् । स तु त्र्यहेण शुद्ध्येत ।

சண்டாளர்களுடைய கிணறு பாத்திரம் இவைகளிலுள்ள ஜலத்தைத்தெரியாமல் எவன் சாப்பிடுகிறானோ அவன் மூன்றுநாள் உபவாஸத்தால் சுத்தியடைகின்றான் என்று

பிருஹஸ்பதியும்—

युगं च द्वियुगं चैव त्रियुगं च चतुर्युगम् ।
चण्डालसूतिकोदक्यापतितानामधः क्रमात् ॥

பதிதனுக்கு ஒரு நுகத்தடியும், பஹிஷ்டா ஸ்திரீக்கு இரண்டும், பிரசவித்தவளுக்கு மூன்றும், சண்டாளர்களுக்கு நான்கும் முறையே விலகவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்,

ஆங்கிரஸ்மிருதியிலும்—

यस्तु छायां श्वपाकस्य ब्राह्मणो तिरोहति ।
तत्र स्नानं प्रकुर्वीत घृतं प्राश्य विशुद्ध्यति ॥

சண்டாளனுடைய நிழலை பிராமணர்கள் மிதித்தால் ஸ்னானஞ்செய்து நெய்பிராசனம் செய்தால் சுத்தியாகிறான் என்று கூறப்பட்டிருக்கிறது. அத்ரிஸம்ஹிதையிலும்

एकाक्षरप्रदातारं यो गुरुं नाभिमन्यते ।
शुनां योनिशतं गत्वा चण्डालेष्वपि जायते ॥

ஒரு எழுத்தை ஒருவரிடமிருந்து நாம் கிரகித்தாலும் அவரை குருவாகபாவித்து மரியாதை செய்யவேண்டும். அவ்விதம் எவன் செய்யவில்லையோ அவன் கொடிய பாபத்தைத் தொலைப்பதற்கு

நூறு ஜன்மம் நாயாகவும் பிறகு சண்டாளயோனியில் பல ஜன்மாவையும் அடைகிறான் என்றும் அதிகபாபத்தைச்செய்தவர்கள் சண்டாள ஜாதியிற்பிறந்து பலனை அனுபவிக்கின்றார்கள், என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இத்தீண்டாமை விஷயத்தில் இவைபோன்ற இன்னுமனேக ஸ்மிருதிகள் இருந்தாலும் விரிவுக்கஞ்சி விடுத்தனம்.

மேலும் ராமாயணத்தில் பாலகாண்டத்தில் வால்மீகி "திரிசங்கு என்னுமரசன்ஸ்வர்க்கம் போகவேண்டி அதற்குஉபாயம் சொல்லவேண்டுமென்று வசிஷ்டபுத்திரர்களைவேண்ட அது உசிதமில்லையென அவர்களால் தடுக்கப்பட்டும் அவ்வரசன் அவர்களை அடிக்கடி நிர்பந்தத்தின்பேரில் சண்டாளனாகும்படி அவ்வரசனை சபித்தார்கள். அவ்விதமே அவ்வரசன் சண்டாளனாக மாறிவிட அதைக்கண்ட மந்திரிகளும் பட்டணத்து ஜனங்களும் அவனை விட்டு விலகி தூரத்தில் போய்விட்டார்கள்" என்று கூறியிருக்கிறார்.

மேலும் பெரியபுராணத்தில் "நந்தன் என்னும் புலையர்குலத்துதித்த ஒருவன் ஈசனிடத்தில் மிக பக்தியுடையவனாய் சிதம்பரம் போகவெண்ணி போனால் நம் ஜாதி நீசஜாதியாதலால் கோயிலினுள் சென்றுபார்க்க அருகமில்லாத நாம் எப்படி பகவானை தரிசிக்கமுடியுமென்று பிரதிதினம் ஆலோசித்திருந்து கடைசியில் நான் சிதம்பரக்ஷேத்திரத்தையாவது பிரதக்ஷிணம்செய்து கொண்டு கிருதார்த்தனாவேன் என்று தீர்மானித்துச் சிதம்பரஞ் சென்று கோயிலுள்செல்லுவது அனுசிதம் என்று இரவும்பகலும் வீதியை வலம்வந்துகொண்டிருந்தான்" என்று கூறப்பட்டிருக்கிறது.

ஆகையினால் கீழ் எடுத்துக்காட்டின சுருதி ஸ்மிருதி புராணம் முதலியவைகளைக் கவனித்தால் (பஞ்சமர்) என்று ஒரு ஜாதி உண்டென்றும் அவர்கள் தீண்டத்தகாதவர்களென்றும் வெள்ளிடைமலைபோல் தெரியவில்லையா.

புலையர் ஜாதியான நந்தர் ஆலயம்சென்றால் அதிக பாபம் ஸம்பவிக்கும் அதற்கு தம்ஜாதி அர்ஹமில்லையென்று எண்ணி விலகிவிட்டார். இவ்விதம் அந்த ஜாதியில் ஜனித்த மஹானால்

அனுஷ்டித்துக்காட்டியும் அதைச் சற்றேனும் கவனியாமல் இக்காலத்திய சிலர் அவர்களை முன்னுக்குக்கொண்டுவர வேண்டுமென்று முயற்சி எடுத்துக்கொண்டு ஆலயத்தினுள் செல்லாமலிருப்பதை பெரிய குறைவாயும் அதர்மமாயும் எண்ணி ஆலயத்தினுள்ளும் மற்றுமுள்ள பரிசுத்த ஸ்தலங்களிலும் அவர்களுக்கும் பிரவேசிக்க உரிமையிருக்கவேண்டுமென்று கர்ஜிக்கின்றனர். இதையே (தீண்டாமை ஒழித்தலையே) சட்டசபைகளிலும் தீர்மானம் செய்யவேண்டுமாம். என்னே கலியின் கொடுமை!

தீண்டாமையை ஒழித்தால்தான் சகோதர ஒற்றுமையும் ஸ்வராஜ்யமும் கிட்டுமென்று சிலர் சொல்லுவது விந்தையிலும் விந்தை.

(தொடரும்)

R. சுப்பிரமணிய சிரௌதிகள்.

---

## வாரவிருத்தாந்தம்.

வைதிகரா? பம்பாயில் சில வைதிகர்கள் தீண்டாதாரை விநாயகசதுர்த்தியில்ஆலயத்தில் விடுவதாக தீர்மானித்தார்களாம். தீண்டாதார் அருகில் வந்தவுடன் அதில் சிலர் ஆலயத்தில் விடமுடியாது என்றார்களாம். தூரதேசவிருத்தாந்தம் அந்நிரூபர் புத்திக்கு அவச்யமானதைத் துண்டு துண்டாக எழுதுகிறார். ஆதலால் உண்மைபூர்ணமாக விளங்குவதில்லை. பலரிடம் ஷெ உத்ஸவத்திற்காக பணம் வசூலித்திருப்பதால் பணங்கொடுத்தவர்ஸம்மதிக்கமாட்டார் என்று ஓர் காரணம் சொல்லப்பட்டதாம். ஆனால் அவரவர் இஷ்டப்படி நடப்பதா? சாஸ்திரப்படி நடப்பதா? என்ற கேள்வி பிறக்கிறது. தன்னிஷ்டப்படி நடப்பவர் வேதத்தைத் தழுவாததால் வைதிகராவரா?

இதுவா உதவி? காங்க்ரஸ்ஸே தீண்டாமை விஷயத்தில் நமக்கு தீண்டத்தகாததாக ஆனதை ஆஸ்திகாறிவர். ஆமதாபாத்தில் அதற்கென ஓர் தனிக்கமிட்டி கூடி ஓர் பத்திரிகை ஆரம்பிக்கப்

போகிறதாம். இதுதானு அவர்களுக்கு அவசியம் வேண்டிய ஸஹாயம் ? அவர் சேரியில் சுகாதாரத்தையும் அவர்கள் வயிற்றுப் பிழைப்புக்கும் வழிதேடலாகாதா ? பத்திரிகை ஆரம்பித்து ஊரைச் சண்டைக்கிழுப்பதுடன் மாத்ஸர்யத்தை உண்டுபண்ணி அத்தீண்டாதாரையும் பத்திரிகை வாங்கும்படி செய்வதும் உதவியா ?

எல்லாவற்றிற்கும் தாய்: ரவீந்த்ரநாத்தாகூருக்கு வங்காள ஸம்ஸ்கிருத ஸர்வகலாசாலை "கவிஸார்வபௌமன்" என்றபட்டத்தை அளித்தது. பதில் கூறும்போது ஸம்ஸ்கிருதபாஷை வங்காளிக்கு நெருங்கியஸம்பந்தமுள்ளது. ஆதலால் எல்லா வங்காளிகளும் படிக்கவேண்டுமென்றார். ஒரே கடவுளை தத்தம் தைவமாக ஸகல மதத்தினரும் அழைப்பதுபோல் எல்லா பாஷைகளும் கீர்வாணவாணியைத் தயாராகக்கொண்டதென்பது வித்வஜ்ஜன அபிப்பிராயம். நம்மவர் இதைக் கவனித்து கற்க முன் வருவாரா?

நூற்றில் ஒன்று: வர்ணாசிரமதர்மத்தைக் கண்டித்துப்பேசினுல் போதும். பெரிய தேசாபிமானி ஆய்விடலாம். குஜாத் வித்யாபீடத்தின் தலைவர் "காகாகலேல்கார்" என்பார், மதுரையில் பெண்மக்களுக்கு ப்ரத்யேகமாக ஓர் உபன்யாஸம் செய்தார். வழக்கப்படி தர்மத்தைத் தாக்கத்தவரவில்லை. ஆயினும் எப்படியானலும் பெண்கள் புருஷன் உத்திரவு பெற்றே எக்காரியத்துக்கும் வெளியில் வரவேண்டுமென்றார். "எதிலும் புருஷன் உத்திரவு பெற்றே தீரவேண்டும்." என பல அதர்மவாக்யங்களில் ஓர் தர்ம வார்த்தை சொல்லிவிட்டார்.

மாணவரே கவனியுங்கள்: நன்னிலம் போர்ட்ஸ்கூலில்ஆசாரம் என்பதை உபன்யசிக்கும்படி வாலிபசங்கத்தார் ஏற்பாடுசெய்து கேட்டனர். நமது ஸதாசாரத்தின் உண்மையை உணராமல் அதை அவலம்பிக்காமல் பலர் அல்பாயுஸ்ஸுகளாக மாண்டனர். உங்களது புரோவிருத்தியைநாடிக் கூறுகிறேம். எழுங்கள்! ஸதாசாரத்தைக் கைப்பற்றுங்கள். நல் விஷயத்தைக் கேளுங்கள்.

நின்றுகொல்லும்:—ராஜாபராதம்செய்தால் உடனே சிக்ஷை. தைவாபராதம்செய்தால் கொஞ்சநாள் கழித்து சிக்ஷை. திருப்பதி வெங்கடாஜலபதியின் மஹிமையை உணராதாரில்லை. வடதேசத்

திலுள்ளோர் பாலாஜி என இவரை தர்சிக்கவருகின்றனர். இவரதுசொத்தை அந்யவகையில் உபயோகப்படுத்த 2-10-31-ல் சென்னை சட்டசபையில் ஓர் சட்டம் வரப்போகிறது. ஆஸ்திக அங்கத்தினர் அதை எதிர்க்கவேண்டும். ஸ்வாமியும் பக்தரை மிரட்டி வசூல்செய்வதுபோல் ஷி சட்டம் கொண்டுவருபவருக்கு நற்புத்தி புகட்டலாகாதா?

திருவிளையாடல்:—பிரும்மபுத்ராநதியில் ஓர்பெரும்நீர்ஊற்று கிளம்பி ஆகாயத்தில் வெகுதூரம்சென்று இரண்டு பிளவாக கீழே விழுந்ததாம். 20 நிமிஷம் காக்ஷி தோன்றிமறைந்தது. கங்கா தேவியின் திருவிளையாடலில் இது ஒன்று. இயற்கை சாஸ்திரகாரர் என்னகாரணம் கூறினாலும் உலகைக்காக்கவந்த தேவர்களின் திருவிளையாடல்களை ஆஸ்திகர் மறக்கமுடியாது.

ஸர்வக்ஞர் முனிவர்:— அதி நுட்பமான வேதத்தின் கருத்துகளை தர்மசாஸ்திரகர்த்தாக்களான மஹரிஷிகள் உணர்ந்து நம்முடைய நன்மையைநாடி சாஸ்திரமாக எழுதினர். முக்காலத்தையும்உணர்ந்தவர். அவர்ஸகலதத்துவசாஸ்திரார்த்தங்களைஞானக் கண்ணால் கண்டவர். அவர்விதித்த ஆசாரத்தின் உட்கருத்தையும் பயனையும் அறிந்தோ அறியாமலோ நம்பி அனுஷ்டிப்பவர் ஆஸ்திகர். நாயைத்தொடலாகாது, தொட்டால் ஸ்நானம் செய்ய வேண்டும். கர்மகாலத்தில் கண்ணாலும் அதைக்காணலாகாது, என்பது சாஸ்திரவிதி. தற்காலத்திலோ அதையே சிறப்பாகவளர்ப்பது படுக்கையில் கூடப் படுக்கவைப்பது முத்தமிடுவது மற்றும் பலபல கார்யங்களைச்செய்கின்றனர். 'போன்சயர்' என்ற மேனாட்டிலுள்ள ஓர் க்ராமத்தில் ஒருபெண் திடீரென இறக்க ஸந்தேகங்கொண்ட டாக்டர் பரீக்ஷித்து அடிக்கடி நாயிக்கு முத்தமிட்டு ஆலிங்கனம் செய்துகொண்டதால் ஓர்வகைவிஷம் உடலில் ஊறி இறந்தாள் என்றார். நாகரீக நாய்வளர்ப்போர் கவனிக்க.

சாரதாசட்டம் சாகவில்லை:குண்டூரில் பால்யவிவாஹம்செய்த வைச்ய ஸம்பந்திகள் இருவரும் சென்றவாரம் சிக்ஷிக்கப்பட்டனர். இருபது இருபது ரூபாய் தண்டனை. இச்சட்டத்தை அழிக்க முன் வாருங்கள்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா